ஜனவிநோதினி.

இல. 9.] செப்டெம்பர்மீ 1875. [புஸ்த. VI.

வெனிஸ் நகரத்து ஸெண்டு மாற்கு என்னும் ஆலயம்.

வெனிஸ் நகரத்திலுள்ள விசித்திரமான சிற்பவேலைகளில் ஸெண்டு மாற்கு என்னும் கோயில் மிகவும் சிறந்தது. அது வெகு விசித்திரமாய் நிர்மித்திருக்கிறது. அதை முழுதும் வர்ணிக்கவேண்டுமென்றால் ஒரு பெரிய கிரந்தமாகும்; ஆதலால் இங்கே அதன் உற்பத்தியையும், அதிலிருக்கிற முக்கியமான விநோதங்களையும் ஒருவாறாய்ச் சொல்லுகிறோம்:

இப்போது இந்த ஆலயமிருக்கிறவிடத்தில் ஆதியில் ஒரு கோயிலிருந்தது. சிலநாள்கழித்து அந்தக் கோயில் சவங்களைப் புதைக்கத்தக்க விசாலமான வெளியிடமாயிருக்கவில்லையென்று அதற்காக அதை இடித்துவிட்டு அதேவிடத்தில் இந்த ஸெண்டு மாற்கு என்னும் ஆலயத்தைக் கட்டினார்கள். அப்புறமும் இது இரண்டுமூன்றுதடவை சேதப்பட்டு அப்போதைக்கப்போது அந்தந்தக்கால சித்திரவேலைகளுடன் செப்பனிடப்பட்டிருக்கிறது. ஒருதடவையில் அதன் முக்கியமான பாகம்மாத்திரம் கட்டிமுடிய சுமார் நூறுவருஷகாலம் பிடித்தது. மற்றொருதடவையில் விசித்திரமான வளைவு வாசற்படிகளும், வளைவுசாளரங்களும், வில்மச்சுமண்டபங்களும் ஏற்பட்டன. இதுதவிர உட்புறங்களில் அநேக சமாதிமண்டபங்களும் அமைக்கப்பட்டன. இந்த ஆலயமானது அந்தந்தவிடத்திற்குத் தக்கபடி விநோதமாய் உருவேற்படுத்தி மேலே பளிங்குக்கற் பதித்து, நாநாவர்ணமான அநேககம்பங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. அதில் உட்புறமும் வெளிப்புறமுமாய்ச் சேர்த்து அஞ்ஞூறு கம்பங்களிருக்கின்றன; ஆதலால் அதை ஐந்நூற்றுக்கால் மண்ட

பம் என்றும் சொல்லலாம். வெனிஸ்நகரத்தில் பளிங்குக்கற்கள் விசேஷமாய்க்கிடைப்பது அருமையாதலால் முதலில் கட்டடம் முழுதும் செங்கல்லினால் கட்டி அப்புறம் கான்ஸ்டான்டி நோபில் முதலிய பலபட்டணங்களினின்றும் பளிங்குக்கற்களும் இன்னும் அநேகம் சிறந்தகற்களும் அழைப்பித்து அதனால் மேலே அலங்கரிப்பது அக்காலத்து வழக்கம். அதற்கு இந்த விசித்திரமான ஆலயமே ஒரு திருஷ்டாந்தமாயிருக்கின்றது. அந்த ஆலயத்து மேலண்டைவாயிலில் ஐந்து வெண்கல வாசற்படிகளிருக்கின்றன. அந்தக் கோயிலுக்கு அதுதான் தலைவாயில். அதுமத்தியில் ஒரு பெரிய விமானம். அதைச்சுற்றி நான்குபக்கங்களிலும் நான்கு விமானங்களும் சித்திரித்து பொற்பூவால் அழகுசெய்யப்பட்டிருக்கின்றன. அதன்புறமெல்லாம் நானாவர்ண வேலைப்பாடுள்ள கற்களால் கொடுங்கைகளிறக்கி முழுதும் பளிங்குக்கற்களால் ஸ்தம்பங்கள் நாட்டியிருக்கின்றன. கும்பட்டத்திலுள்ள சிறுதுவாரத்தின்வழியால் ஒரு தீபம் மந்தமாய் எப்போதும் எரிந்துகொண்டே இருக்கிறது. உட்புறங்களில் அநேக விளக்குகள் வைத்து அவை நன்றாய்ப் பிரகாசிக்கும்படி வெள்ளிப்பூச்சு பூசியிருக்கின்றன.

இந்த விசித்திர ஆலயத்தின் வேலைத்திறத்தையும் அழகு முழுதையும் படத்தில் எழுதிக்காட்டுவதென்றால் யாரால் முடியும். அடுத்தபடத்தில் அதன் மேற்புறம் சித்திரித்திருப்பதை ஒருவாறு காணலாம்.

நமதுதேசத்து கைத்தொழில்களின் நிலைமை.

கனம்பொருந்தி சிறப்புற்றோங்கிய திருவாங்கூர் மஹாராஜ்ஜியத்தின் இளவரசர் நமது தேசத்தார் செய்துவரும் தொழில்களின் நிலைமையைப் பற்றி ஒரு உபந்நியாசம் செய்திருக்கிறார். அது முக்கியமாய் திருவாங்கூர் நாட்டைக் குறித்ததாயினும், இந்தத்தேசம் முழுமைக்கும் உரிய மிகவும் உபயோகமான விஷயங்கள் அதில் அடங்கியிருப்பதால், அவ்விஷயங்களை இந்தச் சஞ்சிகையைப் படிப்போர் யாவரும் அறிந்துகொள்ளவேண்டுமென்று சிந்தைகொண்டு அந்த உபந்நியாசத்தை இங்கு சுருக்கமாய் ஒருவாறு மொழிபெயர்த்துச் சொல்லுகிறோம்:—

'முயற்சி திருவினையாக்கும்' என்னும் மூத்தோர்வார்த்தை ஒருபோதும் பொய்த்துப்போகாது. அந்த வார்த்தை பிறந்தகாலத்து அவ்விஷயம் எவ்வ

ளவு உண்மையாயிருந்திருக்குமோ, அவ்வளவு உண்மையாகத்தான் இக்காலத்தும் இருக்கிறது. செய்து முடிக்கமாளாது என்று தோன்றுகிற காரியங்களையும் முயற்சியினால் அநேகமாய் வெல்லக்கூடும். ஒரு ஜாதியாராகட்டும், ஒரு தேசத்தாராகட்டும் அவர்கள் எவ்வளவு திறமாயும் செம்மையாயும் கிரமாபிவிர்த்திக்கிடமாயும் முயற்சியைக் கைவிடாமல் பாதுகாத்து வருகிறார்களோ, அவ்வளவிற்கேற்றபடிதான் அவர்களுடைய ஐசுவரியமும் வாழ்வும் அதிகாரமும் இருக்கும்; கீர்த்தியையும் அதற்குத்தக்கபடியே அடைவார்கள். ஆனதுபற்றி அவரவர்களுடைய முயற்சியின் அளவும் குணகுணமும் அவரவர்களுடைய ஏற்றத்தையும் தாழ்ச்சியையும் காண்பிக்கும். இயற்கையான பொருள்கள் அமைந்து சகல சம்பத்துகளும் உண்டாயிருந்தால் ஒரு தேசத்துக்குப் பெருமையன்றோ, அப்படிப்பட்ட பொருள்களை சுவாமி கிருபைபண்ணவிட்டால் மனிதன் என்னசெய்யக்கூடும்? சுவர் இருந்தாலல்லவோ சித்திரம் எழுதலாம். என்றாலோ, அப்படியல்ல; இயற்கைப்பொருள்கள் பெருமையுண்டாக்குமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லையாயினும் மனிதன் அந்தப்பொருள்களை உபயோகத்துக்கு அநுகுணமாகச் சீர்ப்படுத்தாவிடின் அவைகள் பயன்படா. இதுமாத்திரமோ, அப்படிப்பட்ட பொருள்கள் விஸ்தாரமாகக் கிடைக்குமாயின் அநேக தேசத்தார் நமக்கென்ன குறைவு, சுவாமி வேண்டியமட்டும் கொடுத்திருக்கிறார், நாமேன் கஷ்டப்பட்டு வேலைசெய்யவேண்டும் என்று நினைத்து முயற்சியினால் உண்டாகும் லாபங்களை இழந்துபோகிறார்கள். அத்தன்மையான பாக்கியத்தைப் பெறாத தேசத்தார் ஏற்கனவே ஒன்றுமில்லாத நாம் வருந்தி உழைக்காமல் சும்மாயிருக்கக்கூடாதென்று நல்லெண்ணங்கொண்டு தம் மாலியன்றமட்டும் வேலைசெய்து முயற்சியைக் கைவிடாமல் பிடித்து வந்து நீடித்திருக்கும்படியான அநேக விசேஷநன்மைகளை அடைந்திருக்கிறார்கள். இதற்கு முற்காலத்து (Greece) கிரீஸ் தேசத்தாரும், (Sparta) ஸ்பார்ட்டா தேசத்தாரும் உதாரணம். இக்காலத்திலும் (Swiss) ஸ்விஸ் என்னும் தேசத்தார் கவைக்காகாத மலைப்பிரதேசங்களில் இருந்துகொண்டிருந்தும் பிரஜாதிபத்திய துரைத்தனத்தை ஸ்தாபித்துக்கொண்டு அண்டை அயல்தேசத்தார் தங்களை அசக்கவொட்டாமல் பாதுகாத்துவருவதுந்தவிர, அவர்களுக்கே ஆபத்து நேரிடுங்காலத்தில் உதவிசெய்துமிருக்கிறார்கள். (Belgium) பெல்ஜியம், (Denmark) டென்மார்க்கு இந்தத் தேசத்தார்களும் விவசாயத்துக்கு ஏற்றதல்லாத சமுத்திர நீர்மட்டத்திற்குத்தாழ்ந்த இடத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தும் அணைகள்முதலானவை கட்டி, சமுத்திர நீரினால் உபத்திரவம் நேரிடாமல் தங்களைக் காத்துக்கொண்டு தகுந்தமுயற்சிகளால் விவசாயத்தொழிலையும் ஏறக்குறைய பூர்த்தியான சிறந்தஸ்திதிக்குக் கொண்டுவந்திருப்பதுமல்லாமல், கப்பல்யாத்திரை செய்வதில் முதன்மையான ஜாதியார்களில் ஒரு ஜாதியார் என்றுபேரெடுத்து (Africa) ஆபிரிக்கா (Asia) ஆசியாமுதலிய கண்டங்களில் அங்கங்கே நாடுகளைக் கட்டிக்கொண்டு ஆண்டுவருகிறார்கள்.

இயற்கையான சம்பத்துக்கள் அமைந்திருப்பது முயற்சிக்கு இடையூறாக நிற்கின்றதென்று சொன்னோமே; அதெப்படியெனில், அதற்கு உதாரணம் வேண்டுமானால் அங்கங்கே போய்த் தேடவேண்டாம்; நமது இந்தியா தேசமே அந்த விஷயத்தைச் சம்பூர்ணமாய் ரூபிக்கின்றது. இந்தியாவை இந்தப் பெரிய உலகத்தின் சாரசங்கிரகமென்று சொல்லலாம். இவ்வுலகத்

தில் பற்பல இடங்களில் என்னென்ன அதிசயக்காட்சிகளும் அதிசயப் பொருள்களும் காணப்படுகின்றனவோ அவைகளெல்லாம் இந்தியாவிலும் காணப்படுகின்றன. (Alps) ஆல்ப்ஸ் மலைகளின் பனியும், துருவத்துக்க டுத்த பிரதேசங்களின் நடுக்கத்தக்கின குளிரும் ஹிமவத்பருவதத்தில் இருக் கின்றன; ஆபிரிக்காவில் (Sahara) ஸஹார என்னும் பெரிய வனாந்தரத்து க்குப் பிரதியாக இந்தியாவில் ஆஜ்மீர் என்னும் தேசத்தில் ஒரு வனாந்தரம் இருக்கிறது; நம்முடைய தேசத்தில் அக்கினிமலை இல்லையென்பதுமில்லை. மனிதனுக்கு உபயோகமான தாவரப்பொருள்கள் யாவும் இந்தியாவில் விளை• கின்றன. கோதுமை, வாற்கோதுமை, உருளைக்கிழங்கு, தேயிலைமுதலிய வைகளும், பனை, தெங்குமுதலியவைகளும் பற்பல வாசனைத்திரவியங்க ளும் மற்றுமுள்ள அநேகபதார்த்தங்களும் மனிதன் • பாடுபட்டால்தான் உண்டாகின்றனவே. அப்படியன்றியும் தாமாகவும் அநேக இடங்களில் உற்பத்தியாகின்றன, இப்படி அபாரமாக சகல வஸ்துக்களும் இந்தியா வில் அகப்படுவதனாலேதான் முயற்சி ஊக்கம்முதலிய விர்த்திக்கும் சிறப் புக்கும் எதுவான சற்குணங்கள் இன்றியமையாமல் வேண்டுவனவென்று தோன்றாததுபற்றி சுத்தமாகவே இல்லாமலிருக்கின்றன.

இப்படி சொல்லுவதனால் ஒருவரும் வேலைசெய்வதில்லையென்பதல்ல; கஷ்டப்பட்டு ஜீவனம்செய்யும் ஏழைக்குடிகள் நிலத்தைக் கொழுமையாக்கி ஏர் உழுது விதைவிதைத்துத் தண்ணீர்பாய்ச்சிக் களைபிடுங்கி வருஷத்தில் ஏழெட்டுமாதம் ஏறக்குறைய நன்றாகத்தான் பாடுபட்டு உழைக்கிறார்கள். ஆனால் இன்னும்கொஞ்சம் கஷ்டப்பட்டால் இப்போது சாகுபடியாகிற நிலத்திலேயே இரட்டிப்பு மாசூல் உண்டாக்கலாமென்று அவர்களுக்குத் தெரியாது. அவர்களைவிட ஞானத்தில் மிகுந்து செல்வமுள்ள மேலான வர்களுக்காகிலும் அது மனதிற்படுகிறதோ, இல்லை; பட்டாலும் செய்ய எத்தனிக்கிறார்களோவென்னில் அதுவுங்கிடையாது. அரிசியும் மற்ற சாமக் கிரிகளும் இக்காலத்தில் மிகவும் நஷ்டமாயிருக்கின்றன; முன்னே எல்லாம் ஒரு அணாவுக்கு ஒருபடி அரிசி விற்றுக்கொண்டிருந்ததென்று ஜனங்கள் முறையிடுகிறார்கள். இது ஏனெனில், ஜனத்தொகை அதிசீக்கிரமாய் முன் னிலும் இப்போது விருத்தியாயிருக்கிறது; விவசாயத்தொழிலோ வெகு வாய் மட்டுப்பட்டிருக்கிறது. இத்தேசத்தில் முக்கியமாய் ஆகாரத்துக்கு உபயோகப்படுகிற தானியம் நெல்; இத்தேசத்தில் விளையும் நெல் போதாது; ஆகையால் வருஷாவருஷம் வெளிதேசங்களிலிருந்து லட்சம் லட்சமாய் சரக்கு இறக்குமதி ஆகவேண்டியிருக்கிறது. இப்படியிருக்க, கரம்புநிலங் களைச் சாகுபடிக்குக் கொண்டுவராமலும், நன்றாய் உழுது செம்மையாய் எருப்போட்டு அந்தந்த நிலச்சாரத்துக்குத் தக்கவிதைகளை விதைத்து வேண் டும் சமயத்தில் தண்ணீர்ப்பாய்ச்சி அறுப்பறுத்து மாசூலை அதிகப்படுத்தாம லும் கைகட்டி உட்காந்துகொண்டு சும்மா வாயினால் வதறுகிறார்கள். இதற் காக ஒன்றுந்தெரியாத ஏழைக்குடிகளை தூஷிக்கக்கூடாது; முக்கியமாய் இது விஸ்தாரமான நிலங்களுக்கு அதிகாரிகளாயிருக்கிற தனவான்களு டைய தப்பிதம்; இவர்கள் முன்னின்று வழிகாட்டுவாராயின் அந்த ஏழை களும் பின்தொடருவார்கள்.

ஒரு தேசத்தினுடைய தொழில்களை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம்; வேலைசெய்வதற்கான பொருள்களை விளைவுசெய்வது ஒன்று; அப்பொருள் களைக்கொண்டே கையினாலாவது யந்திரமுதலிய சாதனங்களினாலாவது

வேலைசெய்து உபயோகத்துக்குத் தகுதியாக்குவது மற்றொன்று. இந்தியாவில் விளைபொருள்களின் காரியமே பெரிதாயிருக்கிறது; அப்பொருள்கள் இல்லாவிடின் வேலைசெய்வது கூடாமையால் அந்தக்காரியம் பெரிதாகத்தானிருக்கவேண்டும். கைத்தொழில்கள் அடியோடே சூன்னியமாயிருக்கவில்லை; ராஜதானி பட்டணங்களிலும் இன்னும் சில முக்கியமான ஸ்தலங்களிலும் கைத்தொழில்கள் குறைவில்லாமல் நடந்துவருகின்றன. பம்பாய் பட்டணத்தில் பஞ்சுவர்த்தகம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லிமுடியாது. சுமார் பதினைந்து வருஷத்துக்குமுன் முதல்முதல் அதை ஸ்தாபிக்கும்பொருட்டு அவ்விடத்தில் தனவான்கள் முயன்றபோது வெகு நஷ்டமுண்டாகி தாறுமாறுகப்போயிற்று. பிற்பாடு நாளாவர்த்தியில் விர்த்தியாகி வேரூன்றி இப்போது சீர்மையான ஸ்திதிக்கு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் சில வருஷகாலம் அவர்கள் இங்கிலாந்தில் (Manchester) மான்செஸ்டர் என்னும் பட்டணத்துக்குப் பஞ்சை ஏற்றுமதி செய்துகொண்டுமாத்திரமிருந்தார்கள். இத்தேசத்திலிருந்து போகிற பஞ்சு இங்கிலாந்துக்குப் போய் வேலைசெய்து மறுபடியும் அநேகமாய் இவ்விடத்திற்கே இறக்குமதியாகிறது கண்டு, அந்த வேலையையும் இவ்விடத்திலேயே நடத்தினால் வெகு லாபம் உண்டாகுமென்று அப்படியே செய்யத் தீர்மானித்தார்கள். பம்பாயிலும் சுற்றுப்பக்கங்களிலுமாகப் பதினாறு யந்திரங்கள் ஒரு வினாடியாகிலும் சும்மாயிராமல் வேலைசெய்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்காகப் போட்டிருக்கிற முதற்பணம் 2,04,20,000–ரூபாய்; சென்ற பதினேழுவருஷத்தில் சில வருஷம் நூற்றுக்குப் பத்து பன்னிரண்டுவீதம் லாபம் கிடைத்திருக்கிறது. லாபமே காணுதவருஷமுமுண்டு; சராசரிபார்த்தால் நூற்றுக்கு ஐந்து ஆறு தேறும். சுமார் 5000 நெசவுதறிகளும் 4 லட்சத்துக்கு அதிகமான இராட்டினங்களுமிருக்கின்றன. அவைகள்தவிர பம்பாயைச் சேர்ந்த நாட்டுப்புறங்களில் அனேக யந்திரங்களுண்டு. லாபங்கிடைக்கக்கிடைக்க அதில் மேன்மேலும் ஆசைகொண்டு கிடைத்த லாபத்தையே முதற்பணமாகவைத்தாவது வேறு முதற்பணம்போட்டாவது பஞ்சுவேலையைப் பரவச்செய்யவேண்டுமென்று முதலாளிகள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் பம்பாய்ராஜதானியில் பஞ்சுவர்த்தகம் விஸ்தாரமாய் நடந்தேறிவருவதைக்கண்டு மான்செஸ்டர் வர்த்தகர்கள் நமக்குப் போட்டியாக ஏற்பட்டதேயென்று பயப்பட ஏதுவுண்டு. பம்பாய்ப்பிரதேசத்தில்தான் இப்படி கைத்தொழில் விர்த்தியாகிக்கொண்டுவருகிறதோவென்னில், பங்காளம் இன்னொருவிஷயத்தில் அதற்குத் தோற்றதல்ல. அங்கே நார் உண்டாக்கத்தக்கின ஒருவித செடியை அபாரமாகவைத்து வளர்த்து அந்த நாரினால் ஏறக்குறைய 3,30,00,000 கோணிகள் தைத்து நாலா பக்கங்களுக்கும் அனுப்புகிறார்கள். இப்படி பம்பாயும் பங்காளத்தையும்போல மற்ற இடங்களிலும் வர்த்தகம் கைத்தொழில் பரவுகிறதற்கு வெகுகாலம் பிடிக்கும். விளைபொருள்கள் இல்லாவிடின் வேலை நடத்துவது கூடாதாகையால் முதல்முதல் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், நிலத்தைச் சீர்ப்படுத்திக் கொழுமையாக்கிப் பலனை அதிகப்படுத்த முயலவேண்டும். நம்முடைய தேசம் அநேகமாய் எவ்விதப்பொருள்களும் விளையத்தக்கின நல்ல பூமியென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். நம்முடைய காலின்கீழும் நம்மைச்சுற்றியும் எடுத்து மாளாத ஐசுவரியம் புதைத்திருக்கி

றது; முன்பணம்போட்டு முயற்சிசெய்வோமானால் அந்த ஐசுவரியம் நமக்குச் சித்திக்கும்.

நமக்கு முக்கியமாய் ஆகாரத்துக்கு உபயோகப்படுகிறது அரிசி. நெல் சம்பூரணமாய் விளைகிறதென்று நாம் எண்ணுகிறோம். சிலர் நெல் பிறதேசங்களுக்குப் போய்விடுகிறதாகவும் முறையிடுகிறார்கள். இதெல்லாம் கனவேதவிர உண்மையல்ல. புஷ்டியாய்விளையும் வருஷங்களிலுங்கூட ஐந்து ஆறு லட்சம் ரூபாய் பொறுமான நெல் வரவழைக்கவேண்டியதாயிருக்கிறது. இது நமக்கு வெட்கமான சங்கதியல்லவோ? திரவியமுள்ளவர்கள் பணத்தைச் செலவழித்து இப்பொழுது தண்ணீரில் முழுகிக்கிடக்கும் நிலங்களை நீர் இறைத்து உலரவைத்து சாகுபடிக்கு ஏற்றவைகளாகப் பண்ணுவார்களாயின் நாட்டுவளப்பம் எவ்வளவாய் மேன்மைப்படும். ஆனால் அப்படிப்பட்ட திரவியமுள்ளவர்கள் தங்கள் குடிகளை வருத்தப்படுத்திப் பணத்தைத் திரட்டிப் பெட்டியில்போட்டு பூட்டிவைப்பதே பரமசுகமென்று நினைக்கிறார்கள். நெல்தவிர மற்றதானியங்களும் அபரிமிதமாய் விளையும் படியான நிலங்கள் விஸ்தாரமாய்க் கேட்போரில்லாமல் கிடக்கின்றன. இப்போது போதும்போதாமல் அகப்படும் வாழைமுதலிய பழவர்க்கங்கள் கொஞ்சம் சிரமப்பட்டால் நமக்கு வேண்டியதற்கு மிஞ்சி இதரதேசங்களுக்கு அனுப்பும்படியாயும் உண்டாகும். சாகுபடிக்குக் கொண்டுவரத்தக்கின பாழ்நிலங்கள் இவ்வளவு அவ்வளவல்ல. அப்படியிருக்க நாமேன் நம்முடைய சௌக்கியத்தையும் லாபத்தையும் கோராமல் சும்மா வீண்போதுபோக்கி தூங்கிக்கொண்டிருக்கவேண்டும்?

விபசாயத்தொழில் நடத்துவதற்கு இன்னொரு பெருங்குறைவுமுண்டு. இந்தத் தேசத்தில் சில இடங்கள்தவிர மற்ற எல்லா இடங்களிலும் மாடுகள் இருக்கும் ஸ்திதியைப்பார்த்தால் மிகவும் பரிதாபமாயிருக்கிறது. மாடுகள் விருத்தியாவதற்காவது கொழுத்துப் பருப்பதற்காவது அந்த இடங்கள் தகுதியானவைகளல்லவென்று சொல்லுகிறார்கள். அதை யாராவது சோதித்துப்பார்த்து அறிந்திருக்கிறார்களா? நல்ல விதைகள் சம்பாதித்துப் புல்லை தானியங்களைப்போல ஜாக்கிரதையாகவளர்த்துச் சிறந்த மாடுகள் அழைப்பித்து ஏற்றபடி காப்பாற்றினால் அவைகளின் சிறப்பு எவ்விதமாய்க் குறைந்துபோம்?

விபசாயந்தான் இப்படி இருக்கிறது என்றாலோ, கைத்தொழிலும் அப்படியே. பஞ்சுவேலை முக்கியமாய் பம்பாயில்மாத்திரந்தான் நடக்கவேண்டுமென்பதென்ன? மற்ற இடங்களில் ஏன் கூடாது? கந்தைத்துணிகளும் தேங்காய்நாரும் மற்ற உபயோகமில்லாத வஸ்துக்களும் எவ்வளவு விஸ்தாரமாய் குப்பையில் சேருகின்றன; அவைகளை வீணாக்காமல் கடிதவேலை நடத்தினால் எவ்வளவு லாபம் இந்தத் தேசத்துக்குண்டாகும்!

நம்முடைய அங்கிலேய துரைத்தனத்தார் இத்தேசத்தில் முயற்சியை விருத்திபண்ணும்பொருட்டு எந்தெந்தவிதமாய் அந்தக் காரியம் நிறைவேறலாமோ அதையெல்லாம் பலவழியால் காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். நம்மவர்கள் சுறுசுறுப்பும் ஞானமும் உள்ளவர்களானால் அந்த விஷயத்தில் பிரவேசித்துத் தலையெடுத்துத் துரைத்தனத்தாருடைய கருத்தைப் பூர்த்திபண்ணலாம். கல்விகற்கும் அநேக சிறுவர்கள் உத்தியோகத்துக்காகவே அப்படி வருந்திக் கற்கிறார்கள்போலிருக்கிறார்கள். இத்தனைபேருக்கும் உத்தியோகம் வேண்டுமானால் எங்கேபோகிறது? அப்படிப்பட்ட மூடநம்பிக்

அறுந்த அவயவங்கள் மறுபடி வளர்தல்.

பதினெட்டாவது நூற்றாண்டுவரையில் கற்றுணர்ந்த வித்வான்கள் அனைவரும் ஜந்துக்களின் அவயவங்கள் அறுபட்டுப்போனாலும் மறுபடியும் முளைக்குந்தன்மை அவைகளுக்கு உண்டு என்பதை அங்கீகரிக்கவேயில்லை; ஆனால் கரையார்கள்மாத்திரம் அடிக்கடி இதை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். நண்டுஜாதிகளில் அப்படி முளைப்பது வெகு ஸாதாரணமாம்.

பல்லிக்கு வாலறுந்துபோனால் அது மறுபடி உண்டாகிறதென்பது எவர்க்குந் தெரிந்தவிஷயந்தானே. ஆயினும் இவைகளெல்லாம் பொய்க்கதையென்று கற்றோர்கள் காதுகொடுத்துக் கேளாமலே இருந்தார்கள். 1712-ம் வருஷத்தில் ஒரு வித்வான் கடற்கரைக்குப்போய் கொஞ்சநேரம் ஜலஜந்துக்களை உற்றுப்பார்த்துக் கடைசியில் ஜனங்கள் சொல்லுவதே உண்மையென்றும், பண்டிதர்கள் சொல்லுவது பிசகென்றும் தீர்மானித்தார். பின்னும் அதை நன்றாய்ப் பரிசோதிக்கவேண்டுமென்று சில நண்டுகளைப் பிடித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விரலைத்தறித்துக் கடலோரத்தில் ஒரு சிற்றூறலில் விட்டுவைத்தார்; சிலமாதங்கழித்து வந்துபார்த்து அவைகளுக்குப் புதிதாய் விரல் முளைத்திருப்பதுகண்டு, அதன்வழி யாவர்க்கும் தெரியும்படி செம்மையாய் உபந்நியஸித்தார்.

முப்பதுவருஷத்திற்குமுன் பூததத்வவிசாரியொருவர் ஒரு ஏரிக்கரை வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், சாம்பல்வர்ணமாய் மெல்லிய கொடிபோலொன்றிருக்கக்கண்டு அது ஜீவவர்க்கமா, விருக்ஷவர்க்கமாவென்று பரிசோதிக்கவேண்டுமென்று அவைகளிலொன்றைத் துண்டுதுண்டாய் தறித்தார். உடனே கொஞ்சநாழிகையில் அந்த ஒவ்வொரு துண்டும் சகல அவயவங்களோடு ஒவ்வொரு ஜந்துவாக மாறி ஊர்ந்துபோய் இரைதேடத் தலைப்பட்டன. மறுபடியும் அவர் இரண்டு பூச்சியைப்பிடித்து நெடுக்கே கிழித்து ஒன்றின்பாதியை மற்றொன்றின் பாதியோடு வைத்து ஒட்டினார். அது முன் ஆனதுபோல் ஆகாமல் விசித்திரமாய் வேறொருவகை ஜந்துவாயிற்று. இன்னும் கொஞ்சகாலத்திற்குப்பிறகு மற்றொருவர், இந்தஜந்துக்கள் மாத்திரமேயன்றி இன்னும் அநேக ஜலஜந்துக்களையும் தரைஜந்துக்களையும் நன்றாய்ப் பரிசோதித்து அவைகளுக்குச் சஞ்சரிப்பதற்கு உரிய அவயவங்களும், ஜீர்ணமாவதற்கு உரிய அவயவங்களும் மறுபடியுண்டாகுமென்று கண்டுபிடித்தார். சில ஜந்துக்களுக்குத் தலைவாலிரண்டையும் அறுத்துப்பார்த்தார்; உடனே அவைகளுண்டாயின. இப்படியே நரம்பு, எலும்பு, தசைமுதலியவைகளும் உண்டாகுமென்று கண்டறிந்தார்.

இப்படி விசித்திரமான தெய்வச்செயல்களைக் கண்டுபிடிப்பதினால் இவைகள் பூததத்வசாஸ்திரத்திற்கு விநோதமான விஷயங்களாயிருப்பதுமன்றி, கடவுளுடைய ஜீவகாருண்யத்தையும் திவ்ய சக்தியையும் தெளிவாய்க் காட்டுகின்றன. மேலும் ஜீவனானது நமது தேகத்தில் ஒரு பக்கத்தில் ஒன்றாய் இருக்கவில்லை; துளிதுளியாய்த் தேகமெங்கும் வியாபித்து இருக்கின்றது என்றும் இவைகளால் நன்றாய் விளங்குகிறது.

இப்படி அறுந்த அவயவங்கள் மறுபடி முளைப்பது ஜீவவர்க்கங்கள் எல்லாவற்றிற்கும் ஒரேமாதிரியானதன்று. அந்த சக்தி சிறிய ஜந்துக்களுக்கே அதிகம். ஜந்துக்கள் எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு

அவயவங்களைச்செப்பனிட்டுக்கொள்ளுகிற வல்லமை குறைந்துபோகிறது. பூச்சி புழுமுதலிய அற்பமான ஜந்துக்களை நாம் எவ்வளவு பின்னப்படுத்தினாலும் அவைகள் ஒருருப்படியாய் மாறிப்போம். அவைகள் அந்தத் திறமை இளமையிலேயே அதிகம் நாளாகநாளாகக் குறைந்துபோம். சிறிய ஈக்களுக்குத் தும்பி அறுந்துபோனால் உடனே உண்டாகும். சிலந்திகளுக்குக் கால்போய்விட்டாலும் அப்படியே. மனிதஜாதிக்குமாத்திரம் அப்படியன்று. கர்ப்பத்தில்மாத்திரம் சிசுக்களுக்கு அங்கங்கள் சேதப்பட்டாலும் மறுபடி ஒத்துப்போம்; அப்புறங்கூட இளமையிலேயே ரக்தபுஷ்டியும் ஜீரணசக்தியும் அதிகமாயிருக்கிறபடியால் கொஞ்சநஞ்சம் அங்கஹீனப்பட்டாலும் ஒருவாறு கூடிப்போம். அதிகமாய்க் காயம்பட்டாலும் துரிதத்தில் ஆறிப்போம். கைகாலொடிந்துபோனாலும் செம்மையாய்ச் சிகிச்சைபண்ணினால், முன்னிருந்ததுபோல அவ்வளவு திடமாய் ஆகாமல் போனாலும் முன்னிருந்ததிற்பாதி செம்மைப்படும். வயது சென்றுபோனால் அப்படியாகாது.

இவைகளையெல்லாம் நாம் செம்மையாய் ஆராய்ந்துபார்த்தால் நமக்கு சிருஷ்டியிலகப்பட்ட ஜந்துக்களுக்கு வால்களும், கால்களும், தும்பிகளும், இன்னும் மற்ற அங்கங்களும் உண்டாகிறவழி நன்றாய்த் தெரியவரும். இவைகள் கடவுளுடைய திவ்யசக்தியை எவ்வளவு தெளிவாய்க் காட்டுகின்றது. மனிதனுக்குக் கைகால் முண்டமாய்ப்போனால் அதற்குப் பதில் ஏதாவது வைத்துக்கொண்டு அவன் காரியத்தை எப்படியாவது நடத்துவான். அங்கஹீனப்பட்ட நண்டுமுதலியவைகளை இம்மாதிரி கடவுள் காக்காவிடில் உயிரை இழக்கவேண்டுமேதவிர வேறென்னவழியிருக்கிறது. அப்படிப்பட்ட ஜந்துக்களுக்கெல்லாம் அவைகளின் வயதிற்குத்தக்கபடி ஆறுவாரம் முதற்கொண்டு ஆறுமாதம்வரையில் தும்பிமுதலிய அவயவங்கள் முளைத்துக்கொண்டிருக்கும். நாம் பல்லியின் வாலைப் பிடித்துக்கொண்டால் அது தன் வாலை நம் கையோடு விட்டுவிட்டு ஓடிப்போம். சிலநாள்கழித்து வால்முளைக்க ஆரம்பித்து இரண்டுமூன்று மாதத்திற்குள் பார்வைக்குப் பூரணமாய் முளைத்துப்போம். ஆனால் ஒன்று; அந்த வாலில், தசை,தசைநரம்பு,ரத்தநரம்பு ரத்தம், மாமிசம்முதலியவைகளெல்லாமுண்டாயிருந்தாலும் எலும்புமாத்திரமுண்டாகிறதில்லை. சிலர் அதற்கு மறுபடி எலும்பு உண்டாகிறதேயில்லையென்கிறார்கள். இக்காலத்திய சிலர் நன்றாய்ப் பரிசோதித்து இரண்டுமூன்று வருஷத்திற்குப்பிறகு உண்டாகுமென்று சொல்லுகிறார்கள். பச்சைப்பல்லிக்கு வால்போய்விட்டால் மூன்று வருஷம்வரையில் புதிதாய்முளைக்கிற வாலுக்கு பச்சைநிறம் வருகிறதில்லை. அதுவரையில் சாம்பல்நிறமாயிருக்கும். மூஞ்சூறு, சுண்டெலிமுதலியவைகளுக்கு வால்முளைப்பது வெகுதாமஸம். ஏனென்னில், அவைகள் மழைக்காலமெல்லாம் தூங்குகிறபடியால், தூங்குங்காலத்தில் ஜீவனுக்கு சக்தி குறைவானதால் வெகுநாளாகிறது. அப்படி முளைத்தும் குட்டையாயிருக்கும். இம்மாதிரியாய் அதை ஒருவர் பரிசோதித்துப்பார்த்தார். ஆனால் அது மூன்றுமாதத்தில் இறந்துபோயிற்று;

யாத்திரைக்காரர் ஒருவர் சொல்லக்கேட்டிருக்கிறோம். தென்சமுத்திரத்துத் தீவுகளில் அநேகம் தரைநண்டுகளிருக்கின்றன. அவை தாமிருக்குமிடத்திற்கும் கடலுக்கும் உள்ளேயே துவாரம் செய்துகொண்டிருக்கின்றன. அந்தத்துவாரங்கள் வெகுதூரமிருக்கும்; அவைகள் இராக்காலங்களில் அதின்வழியாய் முழுகித் தண்ணீர்குடிப்பதற்காக கடலுக்குப்போம். அப்படி புல்லிலும் பூண்டிலும் விழுந்துகொண்டுபோம்போது ஒவ்வொருவேளைக

ளில் அதன் கால்களில் மண்ணொட்டிக்கொண்டு பளுவாய் நடக்கக்கூடாமல்போய் அதனால் அந்த உபத்திரவும் பொறுக்கமாட்டாமல் அவைகளே தங்கள் கால்களை ஒடித்துப்போட்டுவிட்டு நொண்டிநொண்டிக்கொண்டு தன்னிருப்பிடம்போய்ச்சேரும். கொஞ்சக்காலம் அங்கேயேயிருந்தால் மறுபடி புதிதாய் கால்கள் முளைக்கத் தலைப்படுகின்றன. அது முளைக்கிறவரையில் அந்த நண்டுகள் தன்னிருப்பிடத்தைவிட்டு வெளியே புறப்படுகிறதில்லை; ஆனால் அப்படிமுளைக்கிற கால்களுக்கு முன்னிருந்த நீளமும் அழகுமிராது.

ஒட்டுமாமரமுதலிய பலவாய் மரங்களை ஒன்றோடொன்று ஒட்ட நாம் அநேகமாய்க் கண்டிருக்கிறோம். ஒரு மாஞ்செடியைப் பெரியமரத்தின் கிளையோடு,இரண்டையும் பால்புறப்படும்படி செதுக்கிவிட்டு, ஒட்டவைத்துக் கட்டுவார்கள். சிலநாளைக்குப்பிறகு அதை அவிழ்த்துப்பார்த்தால் இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆயினும் இரண்டும் ஒன்றாய்ப் போகாது. வேற்றுமைமாத்திரம் நன்றாய்த் தெரிந்துகொண்டேயிருக்கும். ஜீவவர்க்கங்களிலோ அப்படியன்று: ஒரு மனிதனுக்குக் கைகால்முதலியவைகளில் ஏதாவது ஒன்றில்லாமல்போய், மற்றொருவனுடைய கைகால் முதலியவைகளையாவது வேறேதாவது ஜந்துக்களினுடையவைகளையாவது கொண்டுவந்து ஒட்டவைத்தால் சிறிதும் பேதம்தெரியாமல் ஒட்டிப்போய் உணர்ச்சிமுதலியவைகளும் நன்றாய் உண்டாகும். இப்படியே ஒன்றினுடைய கண்ணைப்பெயர்த்து மற்றொன்றிலொட்டவைக்கலாம். ஒரு தேகத்திலிருக்கிற ரக்தத்தை மற்றொரு தேகத்தில் ஊற்றலாம்.

இவைகளையெல்லாம் பரிசோதித்துப்பார்த்து அநேக வைத்தியர்கள், இவ்வகையாய் எலும்புகள் ஒடிந்துபோனாலும் ஒட்டவைக்கலாம் என்று கண்டுபிடித்தார்கள். அதற்காக அநேக பரீக்ஷைகளும் செய்து ஜயமடைந்தார்கள். இம்மாதிரியே பற்கள் உதிர்ந்துபோய்விட்டால் மற்றொன்றின் பல்லைக்கொண்டு ஒட்டவைக்கும்படி அநேக முயற்சிகள் செய்துபார்த்தார்கள்; ஆயினும் அது இன்னும் செம்மையாய்த் தீர்மானிக்கப்படவில்லை. பற்களெல்லாம் ஒரு வகையான பையிலிருந்து முளைத்து அதைவிட்டு அசக்கக்கூடாமல் அதிலேயே நன்றாய்ப் பதிந்திருக்கின்றன. ஒரு நாயினுடைய பல்லை அந்தப் பையோடுபிடுங்கி மற்றொரு பல்லில்லாத நாய்க்கு ஒட்டவைத்துப் பரிசோதித்ததில் அது நன்றாய் ஒட்டிக்கொண்டு ஸஹஜமான பற்கள்போலாயின. ஆயினும் ஒவ்வொரு பற்களைப்பிடுங்கி மற்றொன்றின் பையில் ஒட்டவைத்தால்மாத்திரம் அது வேரிறங்கி ஒத்துப்போகிறவழி நன்றாய் அகப்படவில்லை.

தேஹத்திற்குள் எலும்பு அடியோடு போய்விட்டால் அதைச் செப்பனிடுகிற வழிமாத்திரம் இன்னும் விசதமாய்க் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு தேஹத்தில் எவ்வளவு எலும்பு சேதப்பட்டுப்போயிற்றோ, அவ்வளவு எலும்பு அதேமாதிரியான பிராணனோடு இருக்கிற தேஹத்திலிருந்து எடுத்து வெகு நுட்பமாயும் ஜாக்கிரதையாயும் ஒட்டவைத்துப்பார்த்ததில் ஒருவாறு ஒத்திருந்ததேயன்றி இயல்பாயிருந்த எலும்புபோலாகவில்லை. இதுவல்லாமல் நாள்தோறும் துளிதுளியாய் எலும்புகளைக் கொண்டுவந்து ஒட்டினால் வழிக்குவருமோ என்னவோவென்று முயன்றார்கள்; அதுவும் கைகூடவில்லை. இனி ஒருவேளை அதிக ஊகையும் புத்திநுட்பமும் உள்ள வித்வான்கள் ஜநிப்பார்களாயின், இப்படிப்பட்ட காயங்களுள்ள ஜனங்களுக்கு நல்ல லாபங்கிடைக்கலாம்.

சீர்திருத்திய பயிர்த்தொழில்.

துரைத்தனத்தார் பரீட்சைக்காக ஏற்படுத்திய சைதாப்பேட்டை தோட்டத்தின் பயிர்விசாரணை நடாத்தும் டப்பில்யூ. ஆர். ராபர்ட்ஸன் துரை நூதன விவசாயத்தைப்பற்றி சென்னை விநோதவஸ்துசாலையில் செய்த உபந்யாஸத்தை மொழிபெயர்த்து முன் சில ஸஞ்சிகைகளில் எழுதினோம். இப்போது சீர்திருத்திய பயிர்த்தொழிலைப்பற்றி எழுதிய அறிக்கைப்பத்திரத்தின் ஸாராம்சத்தை எடுத்துச்சொல்வோம்:

விவசாயத்தில் விருத்தி தெரிந்துகொள்ளும்பொருட்டு செங்கல்பட்டு ஜில்லாவைச்சேர்ந்த ஸைதாப்பேட்டையில் துரைத்தனத்தார் ஒரு கம்பத்தம் வைத்திருக்கிறார்கள். அவ்விடத்தில் மேலேமேலே விருத்தியுண்டாகும் வழியைக் கண்டுபிடிக்கும்படி பரீட்சையாக கிருஷிசெய்ய பயிரிடும் தொழிலில் தேறின ஒரு வித்வானை ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். யூரோப்கண்டத்தில் இப்போது உபயோகத்திலிருக்கிற யந்திரங்களைக் கொண்டு வேலைசெய்யும் விதத்தையும், இன்னும் விவசாயத்தில் விருத்தியைத் தரத்தக்க மார்க்கங்களையும் கற்றுக்கொள்ளலாம். பயிர்விஷயங்களில் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய அம்சங்கள் ஏதாவதிருந்தால் அவர் தெரிவிப்பரென்று 1873–4–ம் வருஷத்துக்காக அவர்செய்த ரிபோர்ட்டில் உங்களுக்கு உபயோகமுள்ளதாக எழுதியிருக்கிற சில அம்சங்களை கீழே எடுத்துக்காட்டுகிறேன்.

கழனிகளைச் சுற்றி பச்சைவேலிகள் பயிராக்குவதனால் இத்தேசத்தின் ரூபம்மாறிச் சீர்திருந்திக்காணும் அவைகள் பட்டிமாடுகளினால் நஷ்டம் உண்டாகாதபடி காப்பதன்றியில், காற்றினுடைய வேகத்தைக்குறைத்து அறுவடைகாலத்தில் காற்றுமழையினால் உண்டாகும் சேதத்தை மிதப்படுத்தும். கிடைகட்டவேண்டியிருந்தால் ஆடுமாடுகள் மடங்குவது சுல்பமாயிருக்கும். இவைகளெல்லாவற்றையும்விட மிகுந்த பிரயோஜனம் வீட்டிற்குவேண்டிய விறகை உண்டாக்கி வறட்டிதட்டுகிற சாணியை கழனிக்கு எருவாகும்படி மீத்துவதாம். வேலிபோடத்தக்க செடிகளில் மிகுந்த உபயோகமுள்ளது கொறுக்காபுளி, இது மிகுந்த சிரமமாவது செலவாவது கொள்ளாமல் பயிராகும். அதிக எருவேண்டியதில்லை; முன்மழைகாலத்தில் விரைபோட்டால் தண்ணீரும்வேண்டியதில்லை. பயிரிடுமவர்களுக்கு பயிர்வேலையில்லாமல் ஒழிவாயிருக்கிற கோடைகாலத்தில் போட்டால் ஒரு அடி நாற்றாகிறவரையில் தண்ணீர் இறைக்கவேண்டும். ஆரம்பத்தில் சிரமப்பட்டு வேலியை செவ்வையாய்க் காப்பாற்றினால் பின்னிட்டு சுலபமாய் நல்ல ஒழுங்கில் காப்பாற்றலாம். இரண்டு வருஷமானபிறகு வருஷத்திற்கு ஒருதடவை வேலியை வெட்டினால் விறகு நல்லதாகவும் மிகுதியாகவும் கிடைக்கும். சென்னபட்டணம் மாதிரியான பூமியில் ஒருமயில் தூரவேலிக்கு வருஷம் 1க்கு 30 அல்லது 40 வண்டிவிறகு அகப்படலாம். இந்த வேலிகள் பெருங்காற்றுக்கு ஆதாரவாய் இருக்கவேண்டியிருப்பதால் மழைகாலத்திற்குப்பிறகுதான் அவைகளை வெட்டத்தொடங்கவேணும்.

இந்து விவசாயத்திற்கு மேலெழுந்தவாரியாயிருப்பது ஒரு சாயம் போலே இருக்கிறது. இரண்டொரு அங்குலம் ஆழமாய்ப் பயிரிடும்படி

செய்கிறவன் உபகாரம், ஒரு இதழ்ப்புல்லைவிட்டு இரண்டிதழ் புல்லுண் டாகும்படி செய்கிறவன் உபகாரம்போலவே வேளாளர்கள் (பயிரிடுபவர் கள்) மறக்கத்தக்கதல்ல.

ஆழமாய்ப் பயிரிடவேண்டுமென்பதற்கு (பயிரடித்தலென்பதற்கு) ஆழ மாய் உழுதல் கருத்தல்ல. இப்படி தப்பு அர்த்தம் செய்வதினாலேதான் இதன் நன்மையறியப்படாமல் தீமையாக நினைக்கப்பட்டதென்று தோற்று கிறது. ஆழமாய்ப் பயிரிடுதலென்பதற்கு பூமி ஆழத்திலே தளர்த்தப்பட வேண்டுமென்பது தாற்பரியம். ஆழமாய்ப் பயிரடித்தலால் சாதாரணமாய் எல்லாப்பூமிகளுக்கும் நன்மையுண்டாகும். ஆழமாய் உழுவதினாலோ அப் படியல்ல. களிவாட்டுமுதலிய சில பூமிகள் ஓரேதடவையில் ஆழமாய் உழு வதினாலே கீழ்மண் மேலேகிளம்பி மேல்மண்ணோடுகலந்து மேல்மண்ணை பலிக்கவொட்டாமல் செய்யும். இதுவும் வெயில் மழை காற்[illegible]வை களின் சேர்க்கையால் கீழ்மண்ணின் குணம் மாறுகிறவரையிற்க வெளுப் படியே மட்டமாயிருக்கினும் அல்லது மேல்மண் சுவாபத்தைக் கெடுக்கத் தக்க கீழ்மண்ணை மேலேவரும்படி ஆழமாய் உழுவதும் புத்தியீனம்.

கெடுதியின்றியில் ஆழமாய் உழத்தக்க மண்களும் இருக்கின்றன. ஆயி னும் சாதாரணமாய் நாள்வட்டத்திலேதான் உழவை ஆழப்படுத்தவேண்டும். ஆழமாய் உழுவதினால் கீழ்மண் எப்போதும் வெளிப்படும். ஆழமாய்ப் பயி ரடித்தலினால் கீழ்மண் கீழேயேயிருக்க, காற்றுக்கும் ஜலத்திற்கும் இடங் கொடுக்கும்படியாய்த் தளர்த்தமாத்திரம் படுமென்பதை கவனிக்கவேண்டி யது. ஆழமாய் உழுவதினால் உண்டாகும்பலன் காய்ச்சல்காலங்களில் தெரியும். சென்றவருஷத்தில் நெடுநாள் மழையில்லாதிருந்தபோது பாகத் திலே அடுத்த முன்வருஷத்தில் கீழே உலாட்டி உண்டாக்கப்பட்டிருந்த நிலங்களில் விளைந்திருந்த சோளப்பயிர் வேறேயிடத்தில் பயிரிடப்பட்டிரு ந்த சோளத்தைவிட இரண்டுபங்கு வளர்த்தியும் அதற்குத்தக்க செழுமையும் உடையதாயிருந்தது. அது வெயிலினால் வறட்சியதிகமாயிருந்த காலத்தி லும் காய்ந்திருந்த மேல்பூமிக்குக் கீழே தாவி ஈரத்தைக் கிரகித்து வளமுள் ளதாயிருக்க இது வறண்டிருந்த மேல்பூமிக்குக் கீழே இரண்டு மூன்றங்கு லங்களுக்கதிகம் இழிய சக்தியில்லாமல் வாடி நோவுண்டானதுபோலி ருந்தது.

இத்தேசத்து வேளாளர்கள் இவைகளின் குணத்தைப்பற்றிக் கவனிக் கிறதில்லை. இது அறியாமையினால் அல்லது உபேட்சையினால் உண்டா கவேண்டுமேதவிர (எல்லாவற்றிற்கும் அவர்கள் சாக்காகச் சொல்லுகிற) ஏழ்மையினால் அல்ல. ஆராய்ந்து எடுத்துவிதைத்தால் விளைகளைக் கொஞ்சம் உழைப்பெடுத்துக்கொண்டு போதுமானதாயிருக்கும். நல்ல விளை விளைக் கிறதில் ஏகரா 1க்கு ஒருரூபாய் அதிக செலவானால் பலகாலத்தில் விசேஷ லாபம் கிடைக்கும்

இதுதவிர தங்கள் நிலத்தில் விளைந்த விதையைப் பிரதிவருஷமும் விதைப்பார்களேயொழிய சமீபத்திலே வேறேமாதிரி மண்ணிலே விளைந்த புது விதைகளை வாங்கி விதைக்க முயற்சிசெய்யார்கள்.

வேளாண்மைக்காரர்கள் ஸ்வப்பிரயோஜனத்தில் ஊற்றமுள்ளவர்களும் விவேகிகளுமாகையால், நிலத்தைச் சீர்திருத்தி பணம்சேர்க்கும் வழியை மாத்திரம் காட்டினால் அந்தப்படி நடப்பார்களென்று வெகுபெயர்கள்

நம்புகிறார்கள். இது சுத்த கனு. இத்தேசத்தவர்கள், அஞ்ஞானமும் குருட்டெண்ணங்களும் குருட்டு ஆசாரமும் ஆகிய இவற்றில் மற்றத் தேசத்தவர்களுக்குக் குறைந்தவராயிரார்.

ஆசையுண்டாவதினாலேயே பணம் உண்டாகிறதில்லை. தெளிவும் முயற்சியும் வேளாண்மைக்கு அவசியம் வேண்டும்.

கெட்டவிதை விதைப்பதினாலும் விதையை அடர விதைப்பதினாலும் உண்டாகும் நஷ்டம் சாகுபடி நிலங்களுக்காக துரைத்தனத்துக்குச் செலுத்தும் தீர்வையில் பாதியிருக்கும். ஆகையால் சற்றே புத்தியைச்செலுத்தி கொஞ்சம் விரயம்செய்வதினால் வேளாண்மைக்காரர்கள் தங்கள் துரைத்தனத்தாருக்குச் செலுத்துகிற தீர்வையில் பாதியைக் குறைத்துக்கொள்ளலாம்.

நீடு ஜில்லாவியாவினுடைய உழவுமாடுகள் இன்னும் பருத்தும் வளர்ந்திருக்தம் வேண்டும். மாடு பாரியாயிருந்து ஆழமாய்ப் பயிரிட்டால் நல்லவிளைவு விளையும்.

ஆனால் தென்னிந்தியாவில் செல்வம் நாகரீகம் முதலியவைகளில் குறைவுபாடாயிருக்கிற பாகங்களில் மாட்டைப் பெருக்கடிக்க எத்தனிப்பதுக்குமுன்னே தீனியை அதிகப்படுத்தும்வழியை முந்தி தேடவேண்டும். இப்போது நடக்கிறதுபோல அத்தனை வேளாண்மைக்காரர்களும் வெயில்காலத்தில் மாடுகளை தீனியில்லாமல் அலையவிடுவது சதிரென்று நினைக்கிறமட்டில் மாட்டை பெருக்கடிக்க நினைப்பது அயுக்தம்.

சுதேசத்திய ஆடுமாடுகள் இந்த தேசத்து ஆள்களைப்போலவே, தங்களுடைய கெட்டஸ்திதிக்கு ஒத்ததாக நடந்துகொள்ளுகிறதுகள். வேலை அதிகமாகக் கிடைத்து ஆகாரம் நயமாயிருக்கும்போது 3–தரம் கூலிக்காரன் சாப்பிடுகிறான். அவன் வேலைகுறைந்து ஆகாரம் கிராக்கி ஆகஆக நாளைக்கு ஒருதரம் சாப்பிடுவான். வேலையில்லாமலாவது ஆகாரம் மிகவும் கிராக்கியாகவாவதுபோனால் ஒருதரம் சாப்பிட்டிருப்பான். மெள்ளமெள்ளப் பட்டினியிருந்து வாடிக்கைசெய்வதினால் ஒத்துப்போகிறது. ஆடுமாடுகள் விஷயத்திலும் அப்படித்தான். அவைகள் நல்ல சுகஸ்திதியிலிருக்கிறபோது தின்னும் தீனியில் பாதியிலொருபங்குக்குள் ஜீவிக்கும்படி செய்யலாம். இதேமாதிரிதான் வெயில்காலத்தில் அவைகளை இத்தேசத்தார் காப்பாற்றுகிறது அவைகளுக்குப் போடவேண்டிய தீனியில் பத்தில் ஒருபங்கு ஆகாரத்தில் அவைகளை ஜீவிக்கும்படி செய்யக்கூடுமோனாலும் அந்த ஜந்துக்களை நல்லஸ்திதியில் ரட்சிக்கத்தக்க ஆகாரத்தளவுக்கு அதைப் படிப்படியாய் உயர்த்துவது சுலபமல்ல. ஆகையால்தான் நெடுநாள் காய்ந்திருந்து பனிச்சென்று மழைபெய்து நல்ல புல் விழுவதினால் ஆடுமாடுகளுக்கு அவ்வளவு சேதம் இத்தேசத்தில் உண்டாகிறது. ஆகாரமில்லாமல் பட்டினியினால் இறக்கும் ஆடுமாடுகள் கொஞ்சம்தான். நெடுநாள் பட்டினியிருந்து வழக்கம்செய்திருக்கிற ஆடுமாடுகள் திடீரென்று உண்டாகிய பச்சைப்புல்லை மிகுதியாய் ஆவலோடு தின்பதினால் உண்டாகும் சேதம்தான் அதிகம்.

பயிரின்நாணயத்தை அதிகப்படுத்துவது இந்த உஷ்ணதேசத்தில் கஷ்டமென்று நான் ஒருகாலத்தில் எண்ணியிருந்தேன். அதிக உஷ்ணம் நமக்கு இதுவிஷயத்தில் ஒரு குறைவு ஆனாலும் வருஷமுழுவதிலும் ஆடு தின்னத்தக்க பயிரை சாகுபடிசெய்யும்படி இருப்பது குளிர்ந்த தேசத்திலி

ருப்பவைகளைவிட நமக்கு ஒருவிதத்தில் குணம். இது ஆட்டுமயிர்வளர்ப்பி தில் மிகவும் முக்கியமானது. சிலகாலம் அதிக தழையினாலும் சிலகாலம் மித மான தழையினாலும் போஷிக்கப்பட்ட ஆடுகளின்மயிர் உறுதியிலும் நாண யத்திலும் ஒருப்படியாயிருப்பதில்லை.

வருஷமுழுவதும் பச்சைத்தீனி சம்பாதிக்கக்கூடுமென்று நம்முடைய பரிட்சையினால் தெரிந்திருப்பதினால் நல்ல நாணயமான மயிர் கடைசி யாய் நாம் உண்டாக்கக்கூடுமென்பதற்கு ஆக்ஷேபம் இல்லை. அதிக உஷ்ண முடைய தேசங்களிலிருந்துதான் லோகத்திற்குள்ளே சிலாக்கியமானமயிர் உண்டாக்கப்படுகின்றன. ஸ்பெயின், தென் ஜெர்மெனி, அமெரிக்காவின் தென்னாடுகள் ஆஸ்திரேலியாவின் தென்பிரதேசங்கள் முதலிய அதற்கு அத்தாட்சியாம்.

ஆனால் சைதாப்பேட்டை ஜாதிஆட்டின் மயிரை நாணயமாக்க வெகு நாள் செல்லும். சென்னபட்டணத்தில் வெயில்காலத்தில் நேரிடுகிற அதியுஷ்ணத்தை சகிக்கும்படியான நல்லமயிருண்டாக்கும் ஜாதியாடு களுடன் இவற்றைப் பொலியச்செய்வதினால் அதிலும் குறைந்தகாலத் தில் நம்முடைய எண்ணத்தை முடிக்கலாம்.

சீனாதேசத்திய ஜாதிஆடு இந்தக்காரியத்துக்கு உபயோகப்படலாம் என்று அவடத்திலிருந்து 3 பெண்ணாடுகளையும், 2 ஆண் ஆடுகளையும் தருவித் தேன்; ஆயினும் அவைகள் இவடத்திய உஷ்ணத்தைப் பொறுக்கமாட் டாமல் மிகவும் நொந்துபோயிருக்கின்றன. சைதாப்பேட்டையில் இது வரையில் உண்டாக்கப்பட்ட மயிரைவிட இந்த ஆட்டுமயிர் மிகவும் மேன் மையாயிருக்கிறது. ஆகையால் இவைகள் மயிரினுடைய நாணயத்தை விருத்திசெய்யும்படியான காலமிருந்தால் நம்முடைய எண்ணத்தை நிறை வேற்ற இடமுண்டு. மயிரினாலேதான் இவைகளுக்கு இவடத்திய ஆடு களைவிட உயர்த்தி, இவடத்திய ஆடுகளின் மாம்சத்தைவிட இந்த ஆடுக ளின் மாம்சத்தில் அதிகம் ஒன்றையும் காணோம். பரந்து தட்டையாயிருக் கிற வால்களினால் ஒரு பிரயோஜனமும் அதிகமாவதில்லை. இவடம் கொண்டுவந்திருக்கப்பட்ட இந்த ஆடுகள் பிழைத்திருக்குமானால் சில பொறுக்கிய ஆண் ஆடுகளை சைதாப்பேட்டை பெண்ணாடுகளுடனும், சைதாப்பேட்டை ஆண் ஆடு ஒன்றை இந்தப் பெண்ணாடுகளுடனும் சேர விடுவதாக யோசனைசெய்திருக்கிறேன். பின்சொன்ன கலப்பினால் ஆடுக ளின் வால்கள் குறுகி சாதாரண அளவாகுமென்று நம்புகிறேன். இந்த அக லமும் தட்டையுமான வால்கள் அடிக்கடி வியாதிக்கிடம் கொடுக்கிறதுகள்.

கரிகாய்விளை நிலங்களிலும் தின்னத்தக்க மாம்சம் கிடையாத மற்ற விடங்களிலும் யூரோப்பியருடைய உணவுக்கு பன்றிகள் உப யோகப்படுமென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அதுவிஷயத்தில் பின்னையும் உங்கள் கவனத்தைச் செலுத்தும்படிக் கேட்டுக்கொள்ளுகி றேன். ஆடுகள் வளர்க்கக்கூடாமையாயிருக்கிற இடங்களிலும் பன்றிவளர்க்கலாம். வளர்க்கிறதைக் கைப்பாட்டினால் ஒரு பவுண்டு பன்றி யிறைச்சி ஒரு பவுண்டு ஆட்டிறைச்சியைவிட குறைந்தவிலையில் கொள் ளலாம். (இன்னும் வரும்.)

தசகுமாரசரிதம்.

ஐந்தாவது:

உஜ்ஜயினீநகரத்து அழகியை மணம்புரிதல்.

போனமாதத்தில் ராஜகுமாரனான ராஜஹம்ஸன் தன் தோழனான புஷ்போத்பவனோடு உஜ்ஜயினீபட்டணம்போய்ச் சேர்ந்து ஸந்தோஷமாயிருந்தானென்று முடிந்தது.

அப்படியிருக்கையில் அந்த ராஜகுமாரனுக்கு அப்பட்டணத்து அரசன்மகளை மணம்புரிய மனதிற்கருத்துண்டாயிற்று. அப்போது வஸந்தகாலமுநெருங்கிற்று. அக்காலத்தில் மல்லிகை, முல்லை, ஜாதிமுதலிய பூங்கொடிகளெல்லாம் நிரம்பப் பூத்துப் பரிமளம் வீசவும், ஏரிகால் குளங்குட்டைமுதலியவைகளெல்லாம் அல்லி, ஆம்பல், தாமரை, செங்கழுநீர்முதலான நீர்ப்பூக்களெல்லாம் புஷ்பித்து ஜகமெங்குமலங்கரிக்கவும், பிரமரங்களெல்லாம் புஷ்பரஸங்களைப் பானம்பண்ணி மநோஹரமாய் ரீங்காரம் பண்ணவும், குயில்களெல்லாம் இளந்தளிர்களைக் கறித்துத்தின்று கொழுத்துப் பஞ்சமராகம் பாடவும், பூமியெங்கும் மஹோத்ஸவமாயிருந்தது. அவ்விளவேனிற்காலத்தில், மலயமலைச் சாரலிலுள்ள சந்தனவிருக்ஷங்களின் வாஸனைப்பொடிகளை வயிறுநிரம்பப் புசித்து வழிநடுவே அநேக உத்தியானவனங்களில் புகுந்து அங்கங்குள்ள மகரந்தங்களையும் நீர்த்திவலைகளையும் வாரிக்குடித்துவிட்டுச் சுமைதாங்கமாட்டாததுபோல் மெல்லமெல்லத் தென்றலும் வீசத்தலைப்பட்டது.

அந்த லோகோத்ஸவமான வஸந்தருதுவில் அப்பட்டணத்து அரசன்மகளான அவந்திசுந்தரியென்பவள் தன் உயிர்த்தோழியான பாலசந்திரிகையுடன் அநேகம் பெண்களைக் கூட்டிக்கொண்டு சிங்காரத்தோட்டத்திற்குப்போய்க் காய்த்துத் தழைத்த ஒரு மாமரத்தின்கீழ் வினோதமாய் விளையாடிக்கொண்டிருந்தாள். அவ்விளவேனிலில் இளஞ்சிங்கமான ராஜஹம்ஸன் அக்குமரியைக் காணக்கருதி தன் நேசனான புஷ்போத்பவனோடுகூடி உல்லாஸமாய் அத்தோட்டத்திற்குவந்து, தென்றற்காற்றிலலைந்துகொண்டு அழகாய்த் தளிர்விட்டுப் பூங்கொத்துகள் குலைகுலையாய்த் தொங்குவதையும், தாமரைத்தடாகங்களில் அன்னமுதலிய நீர்ப்பறவைகள் கோலாஹலமாய்ச் சிறகடித்து விளையாடுவதையும், இன்னும் இச்சாயலான அநேகவிநோதங்களையுங் கண்டு கண்குளிர்ந்து, அநேகபக்ஷிகள் காதுக்கினிப்பாய் இசைபாடக்கேட்டு மனங்களித்து மெல்லமெல்ல நடந்துபோய் அப்பெண்கள் உல்லோலகல்லோலமாய்க் கொந்தளித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். அக்குமரிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த பாலசந்திரிகையா

னவள் இந்த மன்மதனைக்கண்டு, இங்கே வருவதற்கு யாதொருத டையுமில்லையென்று கண்குறிகாட்ட, அவ்வழகனும் மெல்லமெல்ல அச்சுந்தரிகள் வதியுமிடம்போய்ச்சேர்ந்து அக்கூட்டத்தின் நடுவில் ஒருதன்மையாய் விளங்காநின்ற அவந்திசுந்தரியைநோக்கி, மன் மதனே வஸந்தன்முதலியவர்களைத் துணையாகக்கொண்டு தன் மன தினால் இப்பெண்மணியைப் படைத்தானோ! பின் எவன் இவ்வ ளவு அழகுள்ளமேனியைப் படைக்கவல்லவன். அல்லது பிரஜைகளைப் படைத்தலே தொழிலாகக்கொண்ட பிரமதேவனே அநேக சரீரங்களைச் சிருஷ்டித்துக்கொண்டிருக்கையில் இதுவொ ன்று குணாக்ஷர நியாயமாய் உண்டாய்விட்டதோ என்னவோ! அப் படியன்றி பிரமதேவர் இவ்விதமாய்ப் படைக்கவல்லவராயின் இவ் வகைச் சிறப்புள்ளதாய் இன்னும் பலவழகுகளை ஏன் நிருமித்திருக் கக்கூடாது! என்றிப்படி பலவாய் எண்ணமிட்டு அவள் சவுந்தரியத் தைக்கண்டு மோகித்தான். அச்சிறுமியும் அந்த ராஜகுமாரனைக் கண்டு, தெய்வமே நம்மனோரதத்தைப் பூசிக்க இவ்விதவடி வெடுத்து வந்ததோ, இம்மகனைப்பெற்ற பாக்கியவதி எவளோ, எந்த நகரில் எவர்கள் இம்மேனியினருமையைப்பார்த்துப் பே ராநந்தமடைகிறார்களோ, இவன் மணமகள் எவளோ, இவன் இங் குவந்ததற்கு நிமித்தம்யாதோ, இவனைக்காணவே என் மனம் நின் றநிலையில்லாமல் அலைபாய்கின்றதே, இவன் யாரோ? எங்கிருப்ப வனோ? இவன் வரலாற்றை எப்படி விசாரிப்பேன் என்றிப்படி சிந்தித்தவண்ணமாய்க் கொஞ்சம்வெட்கத்தால் தோழிமறைவில் நின்றுகொண்டு அவனிடத்திலேயே கண்ணாயிருந்தாள். அங்கிரு ந்த பாலசந்திரிகை, இவ்விருவர்களுடைய உள்ளக்கருத்தைக் குறிப் புகளால் கண்டுணர்ந்து, இக்கூட்டத்தினடுவே நாம் ஒன்றையும் வெளிப்படையாய்த் தெரிவிக்கக்கூடாதென்று, உலகவழக்குக்கே ற்க, குழந்தாய்! நீ அதிதியாய்வந்த இந்த ராஜகுமாரனை உபசரிக்கக் கடவை; இவர் எல்லாக்கலைகளுங் கரைகண்டவர், தேவதாப்பிரத் தியக்ஷமுள்ளவர், யுத்தவீரர், மணி மந்திர ஓஷதி என்கிற எல் லா விசேஷங்களையும் நுட்பமாய்க் கண்டறிந்தவர். இவரை நாம் உபேக்ஷிப்பது நங்கடமையல்லவென்று சொல்லக்கேட்டு, அவந்தி சுந்தரியானவள் தான் விரும்பியதையே அனுவதித்தாள் என்று ஆநந்தபரவசையாய், அந்த ராஜகுமாரனை ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்து சகிகள் கொணர்ந்த உபஹாரங்களைக்கொண்டு அவனை விசேஷமாய் ஆராதித்தாள்.

அத்தருணத்தில் ராஜவாஹனன் மனதில் ஒரு தோற்றமுண்டா யிற்று. இப்பெண்ணினிடத்தில் நமக்கு இவ்வளவு அனுராகமுண் டாவதற்கேதுவென்ன; இவள் முற்பிறப்பில் நம்மில்லாளான யஞ் ஞவதிபோலவே காண்கிறாள். அப்படியாயின், சாபம்முடிவுபெறுங் காலத்தில், முன்னினைவு இருவர்க்கும் ஒரேரீதியாய் உண்டாகுமெ ன்று அம்முனிவர் உரைப்படி, இக்கன்னிகைக்கும் முன்னினைவு

உண்டாகவேண்டுமே, ஆயினும் இவ்வடையாளங்களைக் குறிப்பாய் காட்டுவோமென்று அவன் யோசிக்கையில், அழகான ராஜஹம்ஸமொன்று விளையாட்டாய் அவளண்டையோடிவந்தது. அதுகண்டு அரசன்மகள் அதைப் பிடித்துத்தரும்படி பாலசந்திரிகையை வேண்ட, ராஜவாஹனன் இதுதான் நம்கருத்தை வெளியிடத்தக்க தருணமென்று, பாலசந்திரிகையைநோக்கி: தோழி முற்காலத்துக் கதையொன்று சொல்லுகிறேன் கேள். சாம்பனென்னும்ஒரு ராஜன் தன் மனையாளோடுகூட ஒரு தாமரைத்தடாகத்துக்குப்போய் ஜலக்கிரீடை செய்கையில் அங்கே ஒரு கமலத்தினடுவே நித்திரைசெய்துகொண்டிருந்த ஓர் அன்னப்பறவையைப்பிடித்துத் தாமரைநூலினால் காலிரண்டையும் கட்டி மந்தஹாஸத்துடன் தன் நாயகியைநோக்கி: மதிமுகமே! இதோ இந்த ஹம்ஸமானது என்னால் கட்டுண்டு முனிவர்போல அமைதியாயுட்காந்திருக்கிறது; இதை உன்னிஷ்டப்படி பிடித்துக்கொண்டு போகலாமென்றான். அப்போது அந்த ராஜஹம்ஸ வேஷம்பூண்ட தபோதனர் அவனைப்பார்த்து, ஓ பூபாலகனே! இந்தத் தாமரைமேல் ஏகாந்தமாயுட்காந்து யோகநிஷ்டனாய்ப் பரமாநந்தம் அனுபவிக்குமென்னை அகாரணமாய் ராஜ்ஜியகர்வத்தால் பிடித்துப் பரிபவப்படுத்தினையாதலின் இதற்குப் பதிலாய் நீ மனையாளைப்பிரிந்து பரிதவிக்கக்கடவாயென்று சபித்தனர். அது கேட்டு சாம்பன் முகம் வாடி அந்தத் துக்கம் ஆற்றமாட்டாமல், அம்முனிவர் கால்களில் வீழ்ந்து கைகூப்பிக்கொண்டு, விவேகமற்றுச்செய்த இப்பிழையைப் பொறுக்கவேண்டும் சுவாமி என்று வேண்ட, அம்முனிவரும் கருணைகூர்ந்து, மகாராஜனே! அடாதது செய்யின் படாததுபடுவன் எனக் கேட்டிலையோ, ஆயினும் இப்போது நாம் உன் கொடுஞ்செயலைப் பொறுத்தோம், இச்சாபம் உனக்கு இப்பிறப்பில் உண்டாகக்கடவதென்று. என்வாக்கு வீண் போகாதாகையால் ஒரு நொடிப்பொழுது நீ என் கால்களைத் தளை செய்தநிமித்தம், மறுபிறப்பிலும் உனக்கு இல்லாளாகப்போகிற இவளுடன் சுகமனுபவிக்கும் காலையில், இரண்டுமாதகாலம் காலும் விலங்குமாய் மனையாளைவிட்டுத் தவிக்கவேண்டும் என்று சொல்லி முற்பிறப்பு நினைப்பும் அவர்களுக்கு உண்டாகும்படி அனுக்கிரகித்தார். ஆதலால் நீ இப்போது அன்னத்தைக் கட்டவேண்டாமென்றான். தன் முற்கதைகளைக்கேட்கவே அவ்வரசன்மகள் இவன் நம் பிராணநாதனேயென்று நிர்ணயித்து மனம்பொங்கி முகமலர்ந்து மந்தஹாஸத்துடன் ராஜகுமாரனைநோக்கி: ஓ, மகாராஜனே! முன் சாம்பன் யஞ்ஞவதியின் கருத்தைப் பூரிக்கும்படி ஸாஹஸமான இக்காரியத்தை நடத்தினானன்றோ; அப்படியே உலகத்தில் கற்றுணர்ந்தோர்களும் ஒருவரிடத்தில் அபிமானத்தால் செய்யத்தகாதவைகளையும் செய்யத்துணிவார்களன்றோ என்று தனக்கும் பூர்வஸ்மரணம்வந்ததாய் அறிவித்தனள். இப்படி அவர்களிருவரும் இன்னும் பல அடையாளங்களைக் குறிப்பாய்ப்

பேசிக்கொண்டு மிக்க நம்பிக்கையுற்றவர்களாய் உள்ளங்களித்து நின்றனர்.

அத்தருணத்தில் அப்பட்டணத்தரசி பரிஜனங்களுடன் தன் மகளுடைய விளையாட்டைக்கண்டு உகக்க அத்தோட்டத்து வாயிலண்டை வருவதுகண்டு, பாலசந்திரிகையானவள் இந்த ரகசியம் வெளிக்குவரப்போகிறதென்று பரபரப்புடன் ராஜவாஹனனை புஷ்போத்பவனோடுகூட மரத்துமறைவில் ஒளித்திருக்கும்படி கண் குறிகாட்டினள். இவ்விருவரும் அவ்வாறே ஒதுங்கிநின்றனர். உடனே ராஜமஹிஷி அவ்விடம்வந்து சற்றளவு அங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துவிட்டு மகளையும் இட்டுக்கொண்டு அரண்மனைபோகப் புறப்பட்டாள். தாயைத்தொடர்ந்துபோகிற அவந்திசுந்திரியானவள், ஓ, ராஜஹம்ஸகுலதிலகமே! என்னுடன்கூடி விளையாடவேண்டுமென்று தானாய்வந்த உன்னை மதியாமல் நான் போய்விடுவது அநியாயமே, இதனால் உன் மனம் சிறிதும் வேறுபடக்கூடாது என்று அன்னத்திற்குச் சொல்வதுபோல் ராஜகுமாரனை வேண்டிக்கொண்டு திரும்பித்திரும்பி அவனுடைய முககமலத்திலேயே கண்ணுற்றவளாய் தன் அந்தப்புறம் போய்ச் சேர்ந்தாள்.

அன்றுமுதல் அவளுருவம் நாளுக்குநாள் தாபத்தினால் மெலிந்துபோவதுகண்டு பாலசந்திரிகைமுதலிய தோழிமார்களெல்லாம் பற்பலவிதமாய் சீதோபசாரங்கள்செய்யத் தலைப்பட்டனர். அவையெல்லாம் அவளுடம்பில் கொதிக்கிறவெண்ணையில் குளிர்நீர் ஊற்றுவதுபோலாயின. அதுகண்டு கிருத்தியாகிருத்தியம் தெரியாமல் தவிக்கின்ற பாலசந்திரிகையைநோக்கி அவந்திசுந்தரியானவள் என்னுயிர்ப்பாங்கி! காமன்பூவாளியான், ஐம்படையனென்று உலகில் அறைகின்றனரே; அது பொய்ப்பேச்சு என்பதற்கு ஐயமுண்டோ; சந்திரன் ஹிமகரனென்பதும்அப்படியே;அவன்வடவாக்கினியினும் மிக்கவெப்பமுள்ளவன்; அவன் கடலில் புகுந்தால் கடல்வற்றவும், அதைவிட்டு மேலே தோன்றினால் கடல்பொங்கவும் காண்கிறோமல்லவா? இவ்வளவுதானோ அவன் கொடுமை; தன்னுடன்பிறந்த பிராட்டிக்கிருப்பிடமான தாமரைமலரையும் வாட்டுகிறானே. அம்மா! நீ எனக்குச் சீதோபசாரம்பண்ணினது போதும்போதும். மருந்தொன்று வியாதியொன்றாயிருக்கிறது. இந்த நோயைநீக்க உன்னால் முடியுமோ? அதற்கு அந்த ராஜகுமாரனல்லவோ வரவேண்டும்; அதுவோ நமக்குக் கைக்கெட்டாதபொருள் என்றாள். அதுகேட்டு பாலசந்திரிகை, இன்னும் கொஞ்சகாலம் நாம் உபேக்ஷையாயிருந்தால், இவள் நாம் காதினால்கேட்டு அறியும்படியான ஸ்திதிக்குவந்துவிடுவள்போல் தோன்றுகின்றது. அதனால் உடனே இதைத் தீர்க்க முயலவேண்டுமென்று அந்தக் கன்னிகைக்குச் செய்யவேண்டிய உபசர்ணைகளுக்காகச் சிலரை நியமித்துவிட்டு ராஜகுமாரனண்டைவந்தாள். அவனும் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் அவளைக் கண்டு ஸந்தோஷமடைந்து: என்னுயிர்த்

தோழி! நீ வந்தசெய்தி என்னவென்று வினவ, அவள் ஸ்வாமி! அன்று சிங்காரத்தோட்டத்தில் தங்களைக் கண்டதுமுதல், மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைகொள்வதுபோல், நம் பேதை தங்களை விரும்புகிறாள். தன்கருத்தை வெளியிட்டுத் தங்களுக்குப் பத்திரிகையும் ஒன்று எழுதியனுப்பினாள் என்று அதை அவன் கையிற்கொடுக்க, அவன் அதைப் பிரித்துப் படித்தான்.

"மலரினுமொளிர்தரு மகிபரின்னுருவமென்
புலனோராறையும் பின்னேகவர்ந்தன
அடியாளிடத்துநீ அருள்கவென்னையனே"

என்று எழுதியிருந்தது. அதைப்பார்த்து ராஜவாஹனன் மனக்களிப்புற்று பாலசந்திரிகே! என் உட்கருத்தை உணர்ந்த நீயும் என்னையே கொடியனாய்க் கூறுகின்றையே, யாவும் உனக்கே தெரியலாம். இக்காரியத்தை நீயே தலைக்கவிட வேண்டும்-நல்ல ஓருபாயம்தேடிக்கொண்டு இன்னும் இரண்டு மூன்று தினத்தில் நான் அவ்விடம்வந்து சேருகிறேன் என்று சொல்லியனுப்பினான். அவளும் சந்தோஷமாய் அந்தப்புறம் போய்ச்சேர்ந்தாள்.

மறுநாள் ராஜவாஹனன் உத்தியானவனத்திற்குப் போய் உலாத்திவருவோமென்று புஷ்போத்பவனோடு கூட அப்பட்டணத்துச் சிங்காரத் தோட்டத்திற்குச் சென்று பலவகைப் புதுமைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில், ஓர் அந்தணன் பலவகைப் பட்டாடைகளும் மகாகுண்டலங்களுமணிந்து சீஷனொருவனோடு தற்செயலாய் அத்தோட்டத்திற்கு வந்து உத்தமபுருஷ லக்ஷணங்களெல்லாம் ஒன்றியிருக்கின்ற ராஜவாஹனனைக் கண்டு ஆசீர்வதித்தான். அவனைக் கண்டு ராஜகுமாரன், நீர் யார்? எதில் மேன்மைபெற்றவர் என்று வினவியதற்கு, அவன் எனக்கு வித்தியேசுவர என்று பெயர், நான் இந்திரஜால வித்தையைக் கரைகண்டவன், நான் என்னுடைய திறமைக்காகப் பல அரசர்களிடம் வெகுமதிபெற்றுக்கொண்டு இப்போதான் இந்த உஜ்ஜயினி பட்டணத்திற்கு வந்தேன். அதுநிற்க; இப்போது உனது உடல் வெளுத்துப்போனதற்கு ஏது ஒன்றையும் காணேனே என்று புன்னகையுடன் விநோதமாய்க் கேட்டான். அதுகேட்டு புஷ்போத்பவன் தன் தோழன்காரியம் இவனாலேதான் நிறைவேற வேண்டுமென்று கருதி லோகாபிராமமாய்ச் சற்றுநேரம்பேசி அவனை நேசப்படுத்திக்கொண்டு, நீங்கள் இப்போது எங்களுக்கு நேசராய்ப் போனீர்கள். நேசர்களுடன் சொல்லக்கூடாத செய்தியும் உலகிலுண்டோ? இந்த ராஜகுமாரனுக்கும் மாளவராஜன் மகளுக்கும் சமாகமம் நேர்ந்து இருவரும் ஒருவர்மேலொருவர் ஆசைகொண்டார்கள். அக்கருத்தை நிறைவேற்ற உபாயமொன்றும் அகப்படாமல் இவர் வருந்துகிறாரென்றான். அவ்விந்திரஜாலன் அதைக்கேட்டு வெட்கித் தலைகுனிந்துநின்ற ராஜகுமாரனைப்பார்த்து உமதிஷ்டப்படி நடத்த நான் காத்திருக்க உமக்கு இவ்வருத்தமேன். நான் இந்திரஜாலவித்தையால் இப்பட்டணத்தரசனை மோஹிப்பித்து பட்-

டணைத்தோரனைவரும் பார்த்திருக்க அக்கன்னிகையை உமக்கு மணம்புரிவித்து அந்தப்புரம் கொண்டுசேர்ப்பேன். இச்செய்தியை மாத்திரம் முன்னமே அப்பெண்ணுக்கு அறிவிக்கவேண்டும் என்ருன். ராஜவாஹனனும் இலவசமாய்த் தனக்கு நேர்ந்த நட்பிற்கு வியந்து தகுந்தமரியாதையுடன் அவனை அனுப்பிவிட்டுத் தானும் தன் தோழனுடன் இல்லம்வந்து சேர்ந்தான்.

மறுநாள் ஐந்திரஜாலிகனென வித்தியேசுவரன் அரசன் அரண்மனை வாயிலில்வந்து தன் வரவை அரசற்கு அறிவித்து அவனுடைய அனுமதியால் கொலுமண்டபத்திற்சென்று தன் திறமையைக்காட்ட ஆரம்பித்தான். அவ்விநோதத்தைப்பார்க்க ஜனங்கள் கூட்டங்கூடிப் போயினர். அரசனும் தன் ஆடம்பரங்களோடுவந்து சேர்ந்தான். அப்போது பலவிதமான வாத்தியங்களும் முழங்க, வித்தியேசுவரன் மயிற்றேகையைச் சுழற்றிக்கொண்டு கொஞ்சநேரம் கண்ணைத்திறவாமலிருந்தான். உடனே அநேக சர்ப்பங்கள் முடிகளில் மாணிக்கங்கள் மின்ன கோரமாய் விஷங்களைக் கக்கிக்கொண்டு யாவரும் பயப்படும்படி அம்மண்டபம் முழுதும் வியாபித்தன. கழுகுகள் அநேகம் அவைகளைக் கொத்திக்கொண்டு வானமெங்கும் படர்ந்தன. பிறகு அவன் முன் நரசிங்கமூர்த்தி ஹிரணியகசிபுவை மார்கிழித்துக்கொன்ற அற்புதத்தை அபிநயித்துவிட்டு, சபாநாயகனைநோக்கி மகாராஜனே! எதுவானாலும் சுபமாயே முடியவேண்டும். ஆதலால் இப்போது தங்கள் குழந்தை, எந்தவிஷயத்திலும் தனக்கு ஒருபடி உயர்ந்திருக்கிற ராஜகுமாரனை, மணமாலைசூட்டுவதாய் அபிநயம் பண்ண உத்தரவுண்டாகுமோ என்ன, அரசன் அதைக் காண விரும்பி அனுமதிகொடுக்கவே; யாவர்கண்களிலும் அஞ்சனம் போட்டு முன்சங்கேதப்படி சித்தமாயிருந்த அவ்விருவரையும் அழைப்பித்து அக்கினிஸாக்ஷிகமாய் விவாஹத்தை நிறைவேற்றிவிட்டுக் கடைசியில் அந்த ஆட்டக்காரன் இங்கே வந்தாடுகிற மாயாபுருஷர் அனைவரும் தந்தமிடம்போய்ச் சேரலாமெனவே மற்றப் பொய்ப்பிள்ளைகள்போலவே அந்த ராஜவாஹனனும் தன் மனையாளோடுகூடி அந்தப்புரம்போய்ச் சேர்ந்தான்.

அதுகண்டு மாளவராஜன் அதிசயித்து அந்தப் பிராமணனுக்குப் பலவாறு சம்மானஞ்செய்து, உமக்கு இப்போதுதான் வித்தியேசுவரன் என்கிற நாமதேயம் சித்தித்தது என்று பேர்கொடுத்து அவனை அனுப்பிவிட்டுத் தானும் தன் அரண்மனைபோய்ச் சேர்ந்தான். இப்படி தெய்வபலத்தாலும் மனுஷியபலத்தாலும் காரியசித்தியடைந்த அப்பெண்பிள்ளை இருவரும் பரமாநந்தமடைந்தார்கள். ராஜவாஹனனும் தன்னில்லாளுக்கு நாடோறும் வியப்பும் ஆச்சரியமுமுண்டாகும்படியான தேசாதேசத்துக் கதைகளையும் சொல்லி அவள் மனதிற்கு உச்சாகமுண்டாக்கிக்கொண்டுவந்தான்.

சமாசாரம்.

பிரின்ஸ் அவ் வேல்ஸ் வருகை.—இந்த மாதத்து வர்த்தமான பத்திரிகைகளில் காணப்படும் சங்கதிகளில் பிரின்ஸ் அவ் வேல்ஸ் சென்னைக்கு வருகைதான் முக்கியமானது. அந்த இளவரசர் வரும்பொழுது சுதேசிகள் அவருக்குக் காட்டும் விநோதமான காட்சி காண்பிக்கத்தக்கதாக மைதானத்தில் மாரிகாலத்தில் நிலைக்கமாட்டாத பெரிய பந்தல் கட்டுவதைவிட்டு இருப்புத்தகட்டால் மேற்கூரை அமைத்த இருப்புப்பாதை மத்தியஸ்தானத்திலாவது ராயபுரத்துஸ்தானத்திலாவது வேண்டிய அலங்காரம்செய்ய எத்தனம்பண்ணினால் உத்தமமென்று சிலர் எண்ணுகிறபடியினாலே, இருப்புப்பாதைச் சங்கத்தாரின் தலைவரிடத்தில் பேசினபொழுது, அவர் மத்தியஸ்தானத்தில் அந்த வேடிக்கை காட்டினால் பிரயாணிகள் போக்குவரவுக்குத் தடை உண்டாகும் என்றார். ராயபுர ஸ்தானத்தில் காட்டினால் காட்டலாம். சிலர் மியுனிஸிபல் சங்கத்தார் சித்தப்படுத்தும் ஒளிவிநோதம் கோட்டையின் தென்மைதானத்திலும், ராயபுரத்திற்குப் போகிற கடலோரத்திலும், சமுத்திரம்முதலிய விசேஷ இடங்களிலும் காட்டும்படி கட்டளையுண்டானால் மிகவும் வேடிக்கையாயிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

பிரின்ஸ் அவ் வேல்ஸ் சென்னைக்கு வரும்பொழுது, அவர் முன்னிலையில் வாசிப்பித்து அவருக்குச் சமர்ப்பிக்கப்படும் வந்தனபத்திரம் வைத்துக் கொடுக்க சிறந்த சிற்பிகளாகிய டேஷாங்துரையும் ஆர் துரையும் உண்டாக்கும் விசித்திரமான கொள்கலம் ஒன்று செய்யப்போகிறார்கள். அந்தக் கருவி பொன் தந்தங்களினாலே செய்யப்படும். அதின்மேல் சித்திரிக்கப்படும் ரூபங்கள் யானை-சோலையில் பதுங்கியிருக்கிற புலி-சர்ப்பம் முதலிய இத்தேசத்து உருவங்களே. இந்த மேன்மையான பெட்டிசெய்யச் செலவு 5,000 ரூபாய் வரையில் பிடிக்குமாம்.

குதிரைப்பந்தயத்தை நடத்தும் துரைமார் பிரின்ஸ் அவ் வேல்ஸ் காணும்படி விசேஷ குதிரைப்பந்தயம் ஆயத்தப்படுத்துவார்கள். அந்தத் துரைமார் பந்தயத்தினிமித்தம் வைத்திருக்கிற பொக்கசப்பெட்டியிலிருந்து பணச்செலவு கொடுப்பார்கள்.

ஆரணி ஜாகிர்தார் பிரின்ஸ் அவ் வேல்ஸ் வருவதைப்பற்றிச் சேகரிக்கப்படும் பொதுப்பணத்தொகைக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறதுமல்லாமல், சர்வகலாசபைக்கு வருஷாந்தரமாய்க் கொடுக்கும்படி, விசேஷ கல்விகற்று தேர்ந்திருக்கிற ஒரு மாணாக்கனுக்கு பொற்பதக்கமொன்று கொடுப்பிக்க முதற்பணமும் வட்டிக்குப் போடுவார்.

பிரின்ஸ் அவர்களும், அவர் பரிவாரமும் எறும் ரதத்தில் மின்சமாசாரம் அனுப்புவதற்கு வேண்டிய உபாயத்தை இருப்புப்பாதைச் சங்கத்தைச் சேர்ந்த மின்சமாசார வகுப்பார் எத்தனிக்கிறார்கள்.

தீபாலங்காரம்.—அங்கிலேய இளவரசனை உபசரிக்கும்படி கோட்டைக்கு வடக்குவெளி—தெற்குவெளி—கடற்கரைமைதானம் இவற்றில் நகரச் சபையாரால் தீபாலங்காரமும் பாணவிநோதமும் செய்யப்படும். கார்த்திகைமீ மாகையால் சென்னையில் சுதேசிகள் வீடுகள்தோறும் இளவரசர் விஜயம்செய்யும்தினத்தைக் கொண்டாடும் முறையாக தீபாலங்காரம் செய்யப்போகிறார்களாம்.

Printed at the C. K. S. Press.



FORT OF ALLAHABAD.

அலஹாபாத் கோட்டை.